# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்.1021/2016/பே.1
ஆணை நாள்: **12-12-2018**

திரு. பிரான்சிஸ்,
த/பெ திரு தாஸ்,
அக்கிவிளை வீடு, வடக்குத் தெரு,
மார்த்தாண்டம் (மற்றும் அஞ்சல்),
கன்னியாகுமரி மாவட்டம்–626165. — முறையீட்டு மனுதாரர்.

பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பிறர்,
பளுகல் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். — எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், அக்கிவிளை வீடு, வடக்குத் தெருவினைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ், த/பெ.திரு.தாஸ், என்பவரது 29.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2016 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.1021/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதார, தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சியில் மத்தம்பாளை–மூவோட்டுக்கோணம் தார்ச்சாலையினை ரூ.27.00 லட்சம் மதிப்பீட்டில் 2012–13 ஆம் ஆண்டில் M.J.D.Constructions and Engineering Contractors என்ற ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் அத்தகைய தார்ச்சாலை, மேற்கண்ட ஆண்டில் இல்லை எனவும், இதன் மூலம் ஊழல் செய்து, பொதுப்பணம் கையாடல் எனவும், புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.27.00 லட்சம் என்ற நிலையில் மேற்படி பணிக்கான ஒப்பந்த அறிவிப்பு மாநில அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளின்படி உள்ளூர் நாளிதழ்கள் இரண்டில் வெளியிடப்பட்டிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு வெளியிடப்படாமல் மாநில ஒப்பந்த மலரில்

20.09.2012ல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், இது விவரம் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் அறிந்து கொள்ள இயலவில்லையென முறையீட்டு மனுவில் தெரிவித்தும், மேற்படி பணிக்கான வரித் தொகையும் குறைவாக பிடித்தம் செய்யப்பட்டு செலுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர் மனுதாரர்கள் மீது குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.10.2016 நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.சி.எட்வின் ஜோஸ், தனது 24.10.2016 நாளிட்ட அறிக்கை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.11.2016 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து, 08.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.D.பிரான்சிஸ், மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது விளக்கத்தில் பளுகல் பேரூராட்சிக்குட்பட்ட மூவோட்டுக்கோணம் – மத்தம்பாலம் இடையில் உள்ள 1,400 மீட்டர் உள்ள சாலையினை நபார்டு வங்கி உதவியுடன் தார்ச்சாலை அமைக்க 10.11.2012 தேதிய பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், ஆனால் தார்ச்சாலை அமைக்காமல் தரம் குறைந்த கான்கிரீட் சாலை அமைத்துள்ளதாகவும், ஒப்பந்தப்புள்ளி கோரும் போது விதிகளின்படி உள்ளூர் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட வேண்டுமெனவும், அவ்வாறு விளம்பரம் வெளியிடப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்போது அனைத்து ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்பட வேண்டுமெனவும், மாறாக எம்.ஜெ.டி.கன்ஸ்ட்ரக்ஷன் அண்டு இன்ஜினியரிங் நிர்வாக இயக்குநர் திருமதி. ஜெனகு ஜெபாந்திலின், அவருடைய பெயரில் ஒரு ஒப்பந்தப்புள்ளியும், மற்றும் அதே நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. மணிகண்டன், மற்றும் மூன்றாவதாக திரு.தேவநேசன் என்பவர் பெயரிலும் மூன்று ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டதாக பேரூராட்சி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் திரு.தேவநேசன் என்பவரால் ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தமைக்கான எந்த ஆதாரமும் இல்லை எனவும், ஒரே நிறுவனத்தினைச் சேர்ந்த கணவன், மனைவி ஆகியோர்களை வைத்து ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டதாகவும், மேற்படி சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டு அளவுகோலின்படி சாலை பணி மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான ஆதாரம் தற்போது தன்னிடம் இல்லையெனவும், 20 நாட்கள் அவகாசம் அளித்தால் உரிய ஆதாரங்களை சமர்ப்பிப்பதாகவும் மற்றும் குறைபாடுகள் குறித்தும் விவரம் அனுப்புவதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வாக்குமூலத்தினைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 27.12.2016 நாளிட்ட கடிதத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இப்பணித் தொடர்பாக தனது சார்பில் தனியார் ஒரு பொறியாளரின் 27.12.2018 நாளிட்ட ஒரு அறிக்கையினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். ஆனால் மேற்படி அறிக்கையில் கையொப்பம் ஏதும் இடப்படவில்லை. இப்பணியினை தல ஆய்வு மேற்கொண்ட நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி

இயக்குநர் மேற்படி பணி 28.12. 2013ல் முடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், முறையீட்டு மனுதாரால் தன்னிச்சையாக 27.12.2016ல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, ஒரு அரசு நிறுவனமோ அல்லது அத்தாட்சி பெற்ற நிறுவனமோ அளித்ததாகவோ இல்லாத நிலையில், காலங்கடந்த மற்றும் அத்தாட்சியற்ற ஆவணமாகும். இதனை ஆதாரமாக கருத இயலாது.

இம்முறைமன்ற நடுவ 04.01.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான தல ஆய்வு அறிக்கையினை, முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரையின் அடிப்படையில் உரிய ஆய்வு மேற்கொண்டு சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 02.08.2017 நாளிட்ட தல ஆய்வு அறிக்கையில், மேற்படி பொருள் தொடர்பாக 27.07.2017 அன்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், இளநிலை பொறியாளர், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணி ஆய்வாளர் ஆகியோரால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு தனது ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்பித்துள்ளார்.

25.09.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிப்பாணையில், 27.07.2017 நாளிட்ட நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரங்களைத் தொடர்ந்து, முறையீட்டு மனுதாரின் 08.12.2016 நாளிட்ட வாக்குமூலப் பதிவு மற்றும் 27.12.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்துக் கோரிக்கைகள் குறித்தான விபரங்களை உள்ளடக்கிய ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6(4) (a) ன் கீழ் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 06.07.2018 நாளிட்ட அறிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சிக்குட்பட்ட மத்தம்பாலம்–மூவோட்டுக்கோணம் சாலை 2012–13 ஆம் ஆண்டில் நபார்டு நிதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணியானது மூவோட்டுக்கோணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பளுகல் வழியாக மத்தம்பாலையினை சென்றடைவதாகவும், இதில் பேரூராட்சிக்கு சொந்தமான 1,500 மீட்டர் சாலையில் 1,400 மீட்டருக்கு தார்ப்பணி மேற்கொள்ளப்பட்டு சாலை முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், முறையீட்டு மனுதாரது 08.12.2016 நாளிட்ட வாக்குமூலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது உள்ளூர் நாளிதழில் பிரசுரம் செய்யப்படவில்லை என்ற புகாருக்கு, மேற்படி பணிக்கான ஒப்பந்தம், மாநில அளவில் மேற்கொள்ளப்பட்டதால் மாநில அளவிலான ஒப்பந்தபுளியில் 20.09.2012–ல் பிரசுரிக்கப்பட்டதாகவும், இப்பணிக்கான ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, இதில் டெண்டர் தாக்கல் செய்யப்பட்ட மூன்று நபர்களில் திரு.ஜி.தேவநேசன் என்ற ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி டெண்டர் தகுதியின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படாததால் மன்றத் தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும், திரு.ஜி.தேவநேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி

நிராகரிக்கப்பட்டதை, பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரின் 28.09.2012-ன்படி தனியருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் 08.12.2016 நாளிட்ட வாக்குமூலத்தில் கணவன், மனைவி என ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளிகளை மட்டுமே வைத்து ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளது என்ற புகார் குறித்து, அளித்துள்ள விளக்கத்தில் மனைவி ஒரு கட்டுமான நிறுவன நிர்வாக இயக்குநர் எனவும், கணவன் ஒப்பந்தக்காரர் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒப்பந்த விதிகளில் இதற்கு தடையில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் திரு.டி.பிரான்சிஸ் என்பவரின் 27.12.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்படி சாலையின் பெயரைக் குறித்து எழுப்பிய சந்தேகம் குறித்து கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மத்தம்பபலைக்கு நேரடியாக செல்லும் சாலை நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலை எனவும்,
2. பளுகல் வழியாக மத்தம்பாலைக்கு செல்லும் சாலையில் 1,500 மீட்டர் நீளம் கொண்ட பகுதி பேரூராட்சிக்கு சொந்தமான சாலை எனவும்,
3. நல்லாயன் RC. நடுநிலைப்பள்ளி வழியாக தேரிப்புறம் வந்தடையும் சாலை பேரூராட்சிக்கு சொந்தமான சாலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,

நபார்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மூவோட்டுக்கோணம் பளுகல் வழியாக மத்தம்பாலைக்கு சென்றடையும் பேரூராட்சிக்கு சொந்தமான சாலைப்பகுதியில் மட்டுமே பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேலும் 20.08.2013ல் முடிவு பெற்றுள்ள சாலைப்பணிக்கு முறையீட்டு மனுதாரரால் 29.09.2016ல், சுமார் மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தற்போது மேற்படி சாலை அமைத்து சுமார் 5 ஆண்டுகள் நெருங்குகின்ற நிலையில் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டில் தேய்மானம் ஏற்பட்டு சாலையின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளதாகவும், இருப்பினும், மேற்படி சாலை பொதுமக்கள் பயன்பாட்டிலும், போக்குவரத்து பயன்பாட்டிலும் இருந்து வருவதாக நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவிற்கான கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரின் வாக்குமூலம், 27.12.2016 நாளிட்ட கூடுதல் விளக்கக் கடிதம் மற்றும் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. இதில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகாரான மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு பளுகல் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவரின் விளக்க அறிக்கையில் மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம், பேரூராட்சிகளின் இயக்குநரால் மாநில அளவிலான ஒப்பந்தமலரில் மலர் 12, இதழ்.52/நாள் 20.09.2012ல் பிரசுரிக்கப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து மேற்படி ஒப்பந்தப்புள்ளிக்கான விளம்பரம் பேரூராட்சியில் பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரின் 04.10.2012 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.தேவநேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப குறைபாட்டால் நிராகரிக்கப்பட்ட நிலையில், இது குறித்து மன்றத் தீர்மானத்தில் இடம் பெறப்படவில்லை எனவும், இது குறித்து தனியருக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் 28.09.2012ல்

தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை தவிர்த்து மீதமுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகள் முறையே கணவன்–மனைவி ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் விதிகளின்படி குறிப்பான தடை ஏதுமில்லை எனத் தெரிவிக்கப்பட்டாலும், கணவன் மனைவி ஆகிய இருவரால் அளிக்கப்பட்டுள்ள விலை விவரங்கள், அவர்களிடையே ஒருவருக்கொருவர் சமரசத்துடன் தெரிந்துகொள்ளும் வாய்ப்புகள் உள்ளது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி என்பது கேள்விக்குறியாகி, போட்டி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கலாம். எனவே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியவர்கள் கணவன், மனைவி எனத் தெரிந்திருந்தும் பேரூராட்சி நிர்வாகம் இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒன்றினை மட்டுமே ஏற்று இறுதி செய்துள்ளது முறையானதா என்பது குறித்தும், ஒப்பந்த விதிகள் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் துறை வாரியான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு. பிரான்சிஸ்,
த/பெ திரு தாஸ்,
அக்கிவிளை வீடு, வடக்குத் தெரு,
மார்த்தாண்டம் (மற்றும் அஞ்சல்),
கன்னியாகுமரி மாவட்டம்–626165.

2.செயல் அலுவலர்,
பளுகல் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108.